தெ. ஆ. 'மக்கள் காங்கிரஸ்' தோற்றம்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆனி மீ 17உ வியாழன் (1—7—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆனி மீ 18உ வெள்ளி (2—7—54)	இதழ்: 15

தூத்துக்குடி போலீஸ் இலாகா போக்கு!

ஆச்சாரியார் ஏவிய நாசம் தொடர்கிறது!

தோழர் கே. வி. கே. சாமி தகவல்

தூத்துக்குடியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏற்பட்ட விபரீத விளையாட்டை போலீஸ் இலாகா இன்னும் கைவிட்டபாடில்லை. S. A. P. போலீசை இங்கு வைத்துக்கொண்டு தூத்துக்குடி போலீஸ் இலாகா மனித வேட்டையாடுகிறது. வீதிகளிலே மக்கள் நடமாட முடியவில்லை; பாவம், அப்பாவித் தொழிலாளர்கள்—குறிப்பாக உப்புத் தொழிலாளர்கள்—மற்றும் பலர் சனி இரவுதான் கூலி பெறுவார்கள்—அவ்விதம் கூலி வாங்கும் இடங்களிலெல்லாம் S. A. P. போலீசை வைத்து, பழி பாவத்திற்கு அஞ்சாமல் விரட்டி விரட்டி அடிப்பதும், வாயினால் உச்சரிக்க முடியாத வார்த்தைகளைப் பிரயோகித்தும், ஆட்களைப் பிடித்து வழக்குத் தொடர்ந்து, பஞ்சாயத்து கோர்ட்டில் ரூ. 10, ரூ 20 என அபராதம் வாங்கிக் கொடுக்கும் மிலேச்சத்தனத்தில் ஈடுபட்டு, தூத்துக்குடி பெருங்குடி மக்களை துயரப்படுத்தி வருகிறது, தூத்துக்குடி போலீஸ் நிர்வாகம்!

இதனால் பொதுமக்கள் அஞ்சி, வீதிகளிலே நடமாடக்கூட லாயக்கற்றவர்களாகிக் கொண்டு வருகிறார்கள்; இந்த அக்கிரமம், புதிய போலீஸ் இன்ஸ்பெக்டர் - ஜெனரல் பதவி யேற்றதற்குப் பின் அமோகமாக தலைவிரித்தாட ஆரம்பித்துவிட்டது.

அதுமட்டுமல்ல; இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அவர்கள் பதவியேற்றவுடன், போலீசாரின் கடமையை விளக்கி அறிக்கை விடுத்துள்ளார்—பொதுமக்கள் தாராளமாக போலீஸ் நிலையத்திற்கு வந்து தங்கள் குறைகளைக் கூறிக்கொள்ளும் அளவுக்கு போலீசார் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்—எனக் கூறியுள்ளார்; ஆனால், தூத்துக்குடி போலீஸ் இலாகாவோ அதற்கு நேர்மாறாகச் செயலாற்றி வருகிறது; பொதுமக்கள் தங்கள் குறைபாட்டை எடுத்துச் சொல்ல நிலையத்திற்குச் சென்றால், அந்த மக்களைப் பிடித்து அடிப்பதும், அவர்கள்மீதே வழக்குத் தொடர்ந்து, பஞ்சாயத்து கோர்ட்டில் அபராதம் வாங்கிக் கொடுப்பதுமான ஈனச் செய்கையைக் கையாண்டு வருகிறார்கள், என்று தெரிகிறது.

அதுமட்டுமல்ல; வேண்டியவர்—வேண்டாதவர் என்ற பாகுபாட்டுடன் நடந்து, வேண்டியவர்கள் குற்றம் செய்தால் அந்த வழக்கைப் பதிவு செய்யாமல் விட்டுவிடுவதுடன், வேண்டாதவர்கள் மீது பொய் வழக்குகளும் போடப்பட்டு வருவதாகவும், இந்த அக்கிரமங்களுக்கு முதன்மை பெற்றவர் தென்பாக S. I. அவர்களேதான் என்றும் அறிகிறேன். இவர் தன்னுடைய செய்த வழக்குகளை கணக்கு எடுத்து I. G. அவர்களுக்குத் தகவல் கொடுக்க ஏற்பாடாகிக் கொண்டு வருகிறது என்றும் தெரிய வருகிறது.

தற்போது தூத்துக்குடியில் நடைபெற்ற வெட்டுக் கலவரங்களுக்குக் காரணம் தென்பாகம் S. I. அவர்களையே பொறுப்பாக்கி, பொது மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள்.

கம்யூனிஸ்டுகள், தி. மு. க. தோழர் முத்துச்சாமியை வெட்டிவிட்டனர்; தாக்கப்பட்ட தோழரை ஆஸ்பத்திரிக்குக்கூட, அனுப்பாமல், S. I. அவர்கள் 'பெட்டி' கேசாகப் போட்டு, சிறிய தொகை அபராதமே வாங்கித் தந்தாராம்!

இதை அறிந்தவுடன், S. I. அவர்களிடம் நேரில் சென்று, 'வெட்டினதற்கு இந்தமாதிரி வழக்குத்தானா? இப்போக்கு, காலிகளை வளர்ப்பதாகாதா?" எனக் கேட்டதற்கு, "இந்த வெட்டுப் போதாது," என்று கூறினாராம்!

ஆகவே, I. G. அவர்கள் தூத்துக்குடி சம்பந்தப்பட்ட வரையில் விசேட கவனம் செலுத்தி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

இல்லையேல், I. G. அவர்களின் முயற்சியைப் பாழ்படுத்தும் வகையில், தூத்துக்குடி போலீஸ் இலாகா மனித வேட்டையாடி அவமானக் கறையை உண்டுபண்ணுவதுடன், பொதுமக்களின் பெரும் அதிருப்திக்கும் ஆளாக வேண்டியது வரும் எனவும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

நகரசபை கூட்டத்தில் நான் கலந்துகொள்ளாதிருக்க சதி

நீதிமன்ற உத்திரவால் காங்கிரஸ் உறுப்பினர் ஏமாற்றம்!

தூத்துக்குடி நடராசன் நிலைமையை விளக்குகிறார்

காங்கிரஸ் தோழர்களால் சதி வழக்கு உருவாக்கப்பட்டு, நகரசபை உறுப்பினர் என்பதற்காக என்னையும் அதில் சம்பந்தப்படுத்தி, அரசாங்க சிறையில் ஒரு ஆண்டு காலம் அடைத்து வைத்திருந்தனர்.

இடையிலே, உயர்நீதி மன்றத்தால், ஊருக்குள் போகாது வெளியிலே இருக்கும்படி உத்திரவிடப்பட்டு, வெளியில் வந்தேன்;

28—5—54 - லிருந்து 18—6—54 வரை நகரசபை உறுப்பினர் பதவி இருந்து வருகின்றது; இருந்தும் காங்கிரஸ்காரர்கள், இந்தக் காலத்தில் ஒரு கூட்டமும் கூடாது, காலம் கடத்தி, எனது காலமும் (பதவி) முடிவு செய்து தாக்கீதும் அனுப்பிவிட்டார்கள்; ஆனால், அந்த அப்பாவிகள், 'சட்டம் ஒன்று உண்டு; அது சகலருக்கும் ஒன்று,' என்று நினைக்கவில்லை.

நான், கோர்ட்டில் உத்திரவு பெற்று, 25—6—54ல் நடந்த சாதாரண கூட்டத்திற்கு அவர்கள் எதிர்பாராத நிலையில் மாலை 5-35-க்கு கூட்ட ஹாலுக்குச் சென்றேன்.

இதற்குள் இயக்கத் தோழர்களும், வார்டு மக்களும், என்னை ஒரு ஆண்டு காலமாக பார்க்காத காரணத்தால், காண வேண்டுமென்று ஆவல் கொண்ட பொதுமக்களும், முனிசிபல் கட்டிடத்தில் கூடி ஒலிகள் முழங்கி வரவேற்றார்கள். இந்த வரவேற்பில் மலபார் போலீஸ், உள்ளூர் போலீஸ்காரர்கள் ஏராளம்; நான் கைகூப்பி மக்களிடம் ஆறுதல் கூறி, கூட்டத்திற்குச் சென்றேன். அங்குள்ள காங்கிரஸ் தோழர்களும், சேர்மன் விஸ்வராயரும் விழித்தார்கள்; நான் உத்திரவை நீட்டினேன்; ஆனால், சேர்மன் அரை மணி நேரம் கூட்டத்தை நிறுத்தி வைத்து, ஆபீஸ் வக்கீலிடம் கலந்து, பின்னர் எனக்கு அனுமதி கொடுத்தார்கள்; இதைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் கரகோஷம் செய்தார்கள். அந்த நேரம் பார்க்கவேண்டுமே, காங்கிரஸ்காரர்கள் முகத்தை-கரி பூசிய முகம்போல காட்சி அளித்தது. கூட்டம் முடிந்ததும், மக்கள் ஆரவாரம் செய்ய நான் வெளியே வந்தேன்.

நிறவெறியை ஒடுக்க அரசியல் பாகுபாடற்ற பொது நிறுவனம்

அரசாங்க மாளிகையை நோக்கி படையெடுப்பு!

ஆட்சியைத் தகர்க்கவல்ல — ஆட்சியில் உரிமை பெறுவதே குறிக்கோள்!

கேப்டவுன், ஜூன் 30—

தென் ஆப்பிரிக்காவில் 'உரிமை சாசனம்' ஒன்றைத் தயார் செய்ய 50,000 தொண்டர்கள் தேவை என்று தென் ஆப்பிரிக்காவின் பல்வேறு இயக்கங்கள் ஒன்று சேர்ந்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'மக்கள் காங்கிரஸ்' வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

ஆப்பிரிக்க தேசியக் காங்கிரஸ், தென் ஆப்பிரிக்க இந்தியர் காங்கிரஸ், தென் ஆப்பிரிக்க கறுப்பர்கள் கழகம், தென் ஆப்பிரிக்க ஜனநாயகக் காங்கிரஸ் ஆகிய இயக்கங்கள் அந்த வேண்டுகோளில் கையொப்பமிட்டிருக்கின்றன.

பல்வேறு அரசியல் கட்சிகளும் சேர்ந்துள்ள புதிய இயக்கமான 'மக்கள் காங்கிரசுக்கு,' நாட்டில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவரும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இப்புதிய காங்கிரசின் மூலம் தென்ஆப்பிரிக்காவில் உரிமைக்காகப் போராடும் கட்சிகள் இணைந்து போகவும், எல்லோருமே ஆப்பிரிக்காவில் ஜனநாயக சமுதாயம் ஒன்றை அமைக்கத் தேவையான ஒற்றுமைப் பண்பு ஏற்படுமென்றும் மக்கள் காங்கிரசின் தலைவர்களில் ஒருவர் கூறினார்.

மலான் சர்க்காரின் அடக்குமுறையால் ஜோகன்ஸ் பர்க பகுதியிலிருந்து 58,000-க்கு மேற்பட்ட வெள்ளையரல்லாதார்களை வெளியேற்ற நடைபெறும் முயற்சியை முறியடிக்க போராடப் போவதாக மக்கள் காங்கிரசின் கூட்டறிக்கை மேலும் கூறுகிறது.

இவர்கள் நடத்தும் போராட்டம் சாத்வீகப் போராட்டமாக இருக்குமென்று தெரிகிறது.

"ஆப்பிரிக்க மக்கள் பிரிட்டோரியாவின் சர்க்கார் மாளிகை நோக்கிச் செல்லப் போகிறார்கள் — மாளிகையை நாசம் செய்ய அல்ல; அந்த மாளிகையின் பயன்களில் நாங்களும் பயன்பெற" என்று மக்கள் காங்கிரசின் தலைவர் ஆல்பர்ட் லுத்தல் கூறினார்.

குவாடிமாலாவில் போர் நிறுத்தம்

ஒரே வாரத்தில் மூன்று அரசாங்கம் மாற்றம்!

நியூயார்க், ஜூன் 30—

குவாடிமாலாவில் நடந்த 12 நாட்களாக நடந்த போர் இன்றுடன் முடிவடைந்துவிட்டதென அறிவிக்கப்படுகிறது.

கர்னல் ஆர்ப்ரெடோ மான்சான் என்ற உயர்தர ராணுவ அதிகாரி நாட்டின் தலைமையைப் பூண்டுள்ளார். இந்தப் புதிய அரசாங்கமும் ஒரு ராணுவ அரசாங்கம்தான். இதில் மான்சான் என்ற அதிகாரியுடன் மொனிக் டிரூபாய்ஸ், ஜோஸ் லூயிஸ் சுருலர் ஆகிய இரு அதிகாரிகள் உட்பட இந்த மூன்று ராணுவ அதிகாரிகளாலேயே அரசாங்கம் நடத்தப்படுகிறது.

இதற்கு முன் அரசாங்கத்தை, முன்னாள் ஜனாதிபதி ஜாகபோ ஆர்பென்ஸிடமிருந்து பொறுப்பைப் பெற்றிருந்த, கர்னல் டயஸ் தனது பதவியை ராஜிநாமா செய்துவிட்டதாக இன்று அறிவிக்கப்பட்டது.

கர்னல் டயஸ் உட்பட பலரும், இன்னும் கம்யூனிஸ்டுகளில் முக்கியமானவர்களும் கைது செய்யப்பட்டிருப்பதாக, கர்னல் மான்சான் ராணுவ அரசாங்கம் அறிவித்திருப்பதுடன் நாட்டில் பலரேனும் ஆயுதங்கள் வைத்திருந்தால் அவைகளை அரசாங்கத்திடம் ஒப்புவித்துவிடவேண்டுமெனவும் அறிவித்துள்ளது.

கலகக்காரர்களின் தலைவரான கர்னல் கார்லாஸ் காஸ்டிலோ ஆர்மிஸ் என்பவரும், புதிய ராணுவ அரசாங்கத் தலைவரும் புதன் கிழமை அன்று எல்சால்வடார் என்ற இடத்தில் சந்தித்து தொடர்ந்து சமாதானம் நிலைச் செய்வதுபற்றி பேசுவார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஆச்சாரியார்

பெயரில் ஆரண்யம்!

லக்னோ, ஜூன் 30—

உத்திர பிரதேச சர்க்கார், சுமார் 64 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணத்தில் மிருகங்கள் சுதந்திரமாக சுற்றித் திரிந்து வாழும் காடு ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கின்றனர். அந்தக் காட்டிற்கு சென்னை முன்னாள் முதல்வர் ஆச்சாரியாரின் பெயரைச் சூட்ட எண்ணியுள்ளனராம்!

நம் நாடு

சென்னை 1—7—54 வியாழன்

முடிவு என்ன?

உலகத்தில் உள்ள வல்லரசுகளிடையே மட்டுமல்லாமல், தன்னாட்சி பெற்று இயங்கும் சிறு சிறு அரசுகளிடையேயுங்கூட அன்பு கலந்த நட்புரிமை இல்லை. ஒன்றை ஒன்று சந்தேகக் கண்கொண்டுதான் பார்க்கின்றன.

சோவியத் ரஷ்யாவைச் சார்ந்துள்ள நாடுகளை, ரஷ்யாவின் கைப்பிடிகளென அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் பழிக்கின்றன.

அவ்வாறு பழித்துக் கூறும் ஒன்றினாலேயே, அமெரிக்காவை பின்பற்றும் நாடுகள் அனைத்தும் சுதந்திர அரசுகளாகத் திகழ்கின்றன என மக்கள் கொள்வர் என்பது அமெரிக்காவின் நினைப்பு போலும்!

உலகம் இரு அணிகளாகப் பிரிந்து கிடக்கிறது. பொது உடைமை அணி எனவும், தனி உடைமை அணி எனவும் குறிப்பிடப்படுகிறது. ஒன்றை ஒன்று விழுங்குவதற்கு, தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றன. அத்தகு சூழ்நிலை தானாக உருவாகட்டும் என்று காத்திராமல், அந்நிலை உருவெடுப்பதை கூடுமானவரை துரிதப்படுத்துவதில் ஒவ்வொரு அணியும் தனக்குரிய பங்கை ஒழுங்காக நிறைவேற்றி வருகிறது.

இந்த 'நல்ல' செயலைச் செய்வதில், ஒவ்வொரு அணியும், ஒன்றை ஒன்று மிஞ்சிவிடக் கூடிய நிலையிலேயே முன்னணியில் இருந்து வருகிறது. இதில், எது முதல், எது இரண்டாவது எனப் பாகுபாடுபடுத்துவது என்பது மிக மிகக் கடினம்!

இந்த இரு அணிகளுக்குள்ளாகவும் ஏற்பட்டிருக்கும் போட்டியின் விளைவாக, பொதுவாக உலக மக்களிடையேயும் குறிப்பாக ஒவ்வொரு நாட்டு மக்களிடையேயும் போர் அச்சம் மேலோங்கி நிற்கிறது.

போர்ப்படை பலம் கூடுதலாக இருந்தால்தான் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்வதற்கு, எதற்கும் துணிவு ஏற்படாது என, ஒவ்வொரு அணியும் கற்பனை செய்துகொண்டிருக்கிறது. அத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே, ஒவ்வொரு அணியும் தனது போர்க் கருவிகளை நவநவமாக உற்பத்தி செய்து, மலை மலையாகக் குவித்து வருகின்றன.

அணு குண்டும், நீர்வளிக் குண்டும், இத் தத்துவத்திற்கு இமயம் போன்றவை!

போர்ச் சாதனங்களை உருவாக்குவதில், ஈடுபடுத்தப்படும் மூலப் பொருட்களும், இயந்திரத் தேய்வும், மக்கள் உழைப்பும், மக்களின் நல்வாழ்விற்கு எனச் செலவிடப்பட்டிருக்குமானால், உண்மையிலேயே, உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டையும், இதற்குள்ளாக பல்வளங்களும் கூடியதாக மாற்றி அமைத்திருக்க முடியும். அதிகார வெறி கொண்டு அலைவோரும், தன்னலப் பேய் பிடித்தலைபவோரும், இவ்வுயர்ந்த நிலை, உலகில் தோன்றுவதைத் தடுத்து வருகிறார்கள் எனக் கூறுவது மிகையாகாது.

அரசியல் துறையில் ஏற்கனவே சுதந்திரம் பெற்றுள்ள ஒரு நாட்டில், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களைத் தூக்கி எறிந்து, வேறு ஒரு சாரார் ஆட்சியைக் கைப்பற்ற செய்யப்படும் முயற்சி எவ்வொன்றிலும், மேற்கூறிய பிட்ட இரண்டு அணியில ஏதாவது ஒரு அணியின் தொடர்பு இருக்கத்தான் இருக்கும். இத்தத் தொடர்பு சிற்சில சமயங்களில் வெளிப்படையாகவும், ஒவ்வொரு சமயத்தில் இலைமறை காயாகவும் இருந்துவரும். இப்பெரும் உண்மையைத்தான் சில ஆண்டு காலமாக ஒவ்வொரு நாட்டின் நடைமுறையும் மெய்ப்பித்துக் காட்டுகிறது.

சென்ற பெரும் போருக்குப் பிறகு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சரிந்து போய்விட்டது. அமெரிக்காவின் நிழலில ஒண்டி ஒதுக்கிடம் தேட வேண்டிய கட்டாயம் பிரிட்டனுக்கு ஏற்பட்டுவிட்டது.

அது விட்டுப் போன இடங்களில் எல்லாம், தனது பண பலத்தைக் கொண்டு, அமெரிக்கா ஆதிக்கம் பெறும் நிலை பிறந்தது. இது, பிரிட்டனுக்குக் கசப்பான உண்மைதான். எவ்வளவு கசப்பானதாக இருந்தாலும், எதிர்ப்பதற்குப் போதிய பொருளாதார அடிப்படை இல்லாததால், அமெரிக்காவின் ஆதிக்கச் சேட்டைக்கு ஒத்து ஊதித் தீர வேண்டிய கட்டாயம் பிரிட்டனுக்கு இருந்து வருகிறது.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கதியும் அதுதான். 'பானை படுத்தால் குதிரை மட்டம்' என்ற நிலைமையாவது பிரிட்டனுக்கு இருக்கிறது; பிரான்சுக்கு அதுகூட இல்லை.

அரசியலில் இந்தோ-சீனு விடுதலை பெற்றுவிட்டால், பிரான்சின் 'அந்தஸ்தும்' அத்துடன் அஸ்தமித்துவிட வேண்டியதுதான்!

மொராக்கோவிலே சுதந்திர எழுச்சி! டியூனிஷியாவில் விடுதலை எக்காளம்! பிரெஞ்சு சிந்தியாவில் போர் முரசு! இப்படி, பிரான்ஸ் 'உரிமை கொண்டாடிய ஒவ்வொரு நிலப்பரப்பிலும் உரிமைக் குரல் கிளம்பிய வண்ணம் இருக்கிறது. எனவே, பிரான்ஸ், தன் உள்நாட்டு எல்லையுடன் சத்தடி அடங்கி உட்கார வேண்டியதுதான்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சரிந்துவிட்டபோதிலும், அதனுடைய ராஜதந்திரம் இன்னமும் பட்டுவிடவில்லை. இந்தியத் துணைக் கண்டத்திற்கு அரசியல் விடுதலை கொடுக்கும் விஷயமாக, இன்று பிரிட்டிஷ் பிரதமராக இருக்கிற இதே சர்ச்சில் துரைதான், 'இந்தியாவிற்கு விடுதலை கொடுத்து ஏகாதிபத்திய மூடு விழா செய்யமாட்டேன்' என்று, அன்று கூறினார். அதே சர்ச்சில் துரைதான், பிரிட்டிஷ் மக்களின் முடிவிற்குக் கட்டுப்பட்டு, இந்தியாவின் விடுதலையை ஒப்புக்கொண்டு மதித்து நடக்கவும் பழகிக்கொண்டார். இது, பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் தரத்திற்கும் தன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டு.

அமெரிக்காவின் பின்னேயும் பின்னேயாக பிரிட்டன் இருந்தபோதிலும், இந்தோ-சீன விவகாரத்தில், அமெரிக்காவின் போக்கை ஒப்புக்கொள்ள, ஒரேயடியாக பிரிட்டன் மறுத்துவிட்டது. அப்படி மறுக்காமல் இருந்திருந்தால், இதற்குள்ளாக இந்தோ-சீன விவகாரத்தை முன் தள்ளி, மூன்றாவது உலகப் போர் மூண்டேவிட்டு இருக்கும்; பிரிட்டிஷ் ராஜதந்திரம், அத்தகு அவல நிலை உலகிற்கு ஏற்படாவண்ணம் காப்பாற்றி இருக்கிறது.

சர்ச்சில் துரையும், அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவரும் சந்தித்து நான்கு நாள் கலந்து பேசியுள்ளனர். முடிவு என்ன என்பதை உலகம் எதிர்நோக்கிக் கிடக்கிறது.

விசாரணையின்றி காவலில் வைப்பது ஜனநாயகத்தையே கேலி செய்வதாகும்!

அறியாமை இருக்கும் வரை ஓட்டுரிமை குழப்பத்தை உண்டாக்கும்

உறுதியான எதிர்க் கட்சி இல்லாவிடில் அரசாங்கம் யோக்கியமாக இருக்காது

எச். வி. காமத் இடித்துரைக்கிறார்

"இந்த நாட்டு மக்கள் இன்று அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்களாக இல்லை; வயது வந்தோரிடையே அறியாமை நிலவும்போது, வயது வந்தவர்க்கெல்லாம் ஓட்டுரிமை என்கிற நிலை குழப்பமானதாகவே இருக்கும்."

"வேறு பல நாடுகளின் அரசியல் சட்டங்களிலிருந்து, இந்தியாவின் அரசியல் சட்டம், எல்லா நல்ல அம்சங்களையும் கடன் வாங்கியுள்ளது; என்றாலும், அமைதியாக பூரணமாக இயங்கும் மக்களாட்சிக்குக் கேடு தரும் இரண்டு அம்சங்களும் நமது அரசியல் சட்டத்தில் இல்லாமலில்லை; 'யாரையும் விசாரணையின்றி காவலில் வைக்கலாம்' என்று அரசாங்கத்திற்குத் தரப்பட்டிருக்கும் அடிப்படை உரிமையும், குடியரசுத் தலைவர், கவர்னர்களிடம் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களும், ஆகியவைகளே அந்த தீய அம்சங்களாகும்."

"அரசியல் சட்டம் விகாரமாகப் பெரியதாயிருப்பதுடன், அடிப்படை உரிமைகள் என்ற பகுதியில், 'விசாரணையின்றி ஒருவரைக் காவலில் வைக்கும் அதிகாரம்' சேர்க்கப்பட்டிருப்பது கேலிக்குரியதாய் உள்ளது."

—இவ்வாறு அகில இந்திய பி-சோ. கட்சியின் செயற்குழு உறுப்பினரான தோழர் எச். வி. காமத் பம்பாய் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்தியாவில் இயங்கும் 'மக்களாட்சியின் எதிர்காலம்' என்ற தலைப்பில் அவர் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:

"வருகிற பத்தாண்டுக்குள் இந்திய மக்கள் தங்களுக்குத் தரப்பட்டிருக்கும் ஓட்டுரிமையை, நன்றாகப் புரிந்துகொண்டு தைரியமாக, வெளிப்படையாக உபயோகிக்கத் தவறினால் இந்தியாவில் இயங்கும் மக்களாட்சி மடிந்தொழிவது நிச்சயம்.

"உலகத்தில் எந்த ஒரு அரசாங்கமும், உறுதியான எதிர்க்கட்சி ஒன்று இருந்தாலன்றி, யோக்கியமாகவும், திறமையாகவும் இயங்க முடியாது அப்படி ஒரு உறுதியான எதிர்க்கட்சி இருந்தால்தான், மக்களாட்சி முறையை நாம் வெற்றிபெறச் செய்தவர்களாவோம்.

"இன்றுள்ள அரசாங்கம், சட்ட சபையின் அபிப்பிராயத்திற்கு மதிப்புத் தருவதாயிருக்கவேண்டும்."

தோழர் எச். வி. காமத் இவ்வாறு குறிப்பிட்டுவிட்டு, கேலியாக அவர் மேலும் சொன்னதாவது:

"நல்லதோ கெட்டதோ, காரியங்களைச் சீக்கிரம் முடித்துக் கொள்வதற்கு, செவிட்டு மந்திரிகள், ஊமையான மக்கள் சபை உறுப்பினர்கள், குருட்டு சபாநாயகர் இவர்களை உடையதே சிறந்த வழியாகும்."

நாத்திகம் பரவும் காரணம்?

குன்றக்குடிகளார் கண்டுபிடிப்பு

நாங்குநேரி, ஜூன் 30—"கோவில்கள், மடங்கள் முதலியவற்றிற்கு ஏராளமான சொத்துக்களும் பணமும் இருப்பதினால்தான் மடாதிபதிகள் சோம்பேறிகளாகிவிடுகின்றனர்; நாட்டிலே நாத்திகம் பரவுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

"கோவில்களில் பூஜை என்ற பெயரில் சாமிகளுக்குத் தேங்காய் உடைத்தால் மட்டும் போதுமானதல்ல; மக்களிடையே உண்மையான தெய்வ நம்பிக்கையையும் பக்தி உணர்வையும் பெருக்க ஆதீனங்கள் முயல வேண்டும்."

—இவ்வாறு இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் குன்றக்குடி மடாதிபதி குறிப்பிட்டார்.

7 ஆண்டு கடுங்காவல்; ரூ. 18,500 அபராதம்!

மேற்கு வங்க சர்க்கார் பொக்கிஷதாரான கோவர்த்தன முக்காஜி என்பவருக்கு தனி நீதிமன்ற மொன்றில 7 ஆண்டு கடுங்காவல் தண்டனையும், ரூ 18,500 அபராதமும் விதிக்கப்பட்டது. சர்க்காருக்குச் சொந்தமான ரு 24,700-தைை எதிரி கையாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார்.

ஆலோசிக்கின்றனர்!

சென்னை — விஜயவாடா ஜனதா எக்ஸ்பிரஸ் ஓடவிடுவது பற்றி ரயில்வே அதிகாரிகள் ஆலோசிக்கின்றனர் என்று தெரிகிறது.

மூடு விழா

தொடர்ந்து நஷ்டம் ஏற்படுவதை முன்னிட்டு இராஜபாளையம ஜனகிராம் துணி செய்யும் மில் மூடப்பட்டது. வேலையிழக்கும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படும் என்று தெரிகிறது.

மீண்டும் ஆரம்பம்!

போர்க் காலத்தில் துண்டிக்கப்பட்ட மதுரை—போடிநாயக்கனூர் இருப்புப் பாதை வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன ஜூலை 15-ந் தேதி போக்குவரத்து ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

'பொறுத்திருந்து பாருங்கள்!'

'மன்னல் ஹக் மீது வழக்குத் தொடரப்பட்டாலும் தொடரப்படும்; பொறுத்திருந்து பாருங்கள்,' என்று கராச்சியில் பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி நிருபர்கள் கேள்விக்குப் பதில் அளிக்கையில் கூறினார்.

இரட்டிப்பாகும்!

'சென்னை நகரில் டெலிபோன் லைன்களின் எண்ணிக்கை அடுத்த இரண்டாண்டுகளில் இரட்டிப்பாகும்,' என்று தபால் தந்தி உதவி டைரக்டர் மேஜர் லோசன்சிங் சென்னையில் கூறினார்.

கைத்தறி விற்பனை

இந்தியாவில் செய்யப்படும் புதுரக கைத்தறி துணிகள், மத்திய கிழக்கு, தெற்கு, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஐந்து எம்போரியங்களில் வைக்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை அகில இந்திய கைத்தறி போர்டு அயல் நாட்டு விற்பனைத் திட்டத்தின் கீழ் செய்கிறது.

திருப்தி!

'தஞ்சை மாவட்டத்தில் கொள்ளை நிலைமை பெருமளவு அபிவிருத்தி அடைந்துள்ளது; இனிமேல் அதிக தொந்தரவு எதுவும் இராதென நம்புகிறேன்,' என்று சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டர்—ஜெனரல் வி. ஆர். இராஜரத்தினம் நிருபர் ஒருவரிடம் கூறினார்.

தமிழ்ப் பள்ளி

பம்பாய் சயான் பகுதியில் பம்பாய் கார்ப்பரேஷன் உதவியால் தமிழ்ப் பள்ளிக்கூடமொன்று திறக்கப்பட்டிருக்கிறது. பம்பாயில் மொத்தம் எட்டு தமிழ்ப் பள்ளிகள் இருக்கின்றன என்று தெரிகிறது.

பாம்பு கடிக்குப் பலியாவோர் தொகை!

உலகில் பாம்புக் கடியால் இந்தியாவில் 40,000 மக்கள் மாண்டு போகின்றனர். இந்தியாவில் மட்டும் ஆண்டு தோறும் 15,000 பேர் மரணமடைகின்றனர்.

‘வாழ்வும்-தாழ்வும் அறிவினால்தானல்லாது ஆண்டவனாலல்ல!’

‘மிருகங்கள் பட்டினியால் சாவதுண்டா? மனிதர்கள் பட்டினியால் சாகிறார்களே!’

வேலூர் சமூக சீர்திருத்த மாநாட்டில் நெடுஞ்செழியன் திறப்புரை

26—6—54-ல், வேலூரில் நடைபெற்ற வ. ஆ. மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த மாநாட்டில் திறப்புரை ஆற்றுகையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இந்நாட்டு மக்களினுடையவும், வேற்று நாட்டு மக்களினுடையவும் அறிவு வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுகையில், வேற்று நாட்டவர் இருட்டறையில் நடப்பதற்கு ‘டார்ச் லைட்’ வைத்திருக்கின்றனர் என்றும், இந்நாட்டவர், இருட்டறையில், கையால் தடவித் தடவி நடக்க வேண்டிய நிலையிலிருக்கிறார்களென்றும் குறிப்பிட்டார்.

பட்டினியால் மிருகங்கள்கூட சாகாமலிருக்கையில், இந்த நாட்டிலே, மனிதர்கள் பட்டினியால் சாவது தினசரி சம்பவமாக இருப்பதற்குக் காரணமென்னவென்று கேட்டார்; ஆயிரமாயிரம் அவதாரங்கள் எடுத்த ஆண்டவன் வதியும் நாட்டில் பட்டினிச் சாவுகள் பரவும் நிலைமை எவ்வாறு ஏற்படுகிறதென்று வினவினார்; தேவைக்கு அதிகமாகவே உணவும், உடையும், உறையுளும் இருக்கும்போது, பட்டினிச் சாவுகளும், தற்கொலைகளும் மலிந்து கிடப்பதற்கு மூலகாரணம் என்ன என்பதைச் சுட்டிக் காட்டினார்.

அவரது பேச்சின் விவரம் கீழே தரப்படுகிறது :—

“வ. ஆ. மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த மாநாடு இன்று நடைபெறுகிறது. மாநாட்டில் பங்கு பெற்றுள்ள கழகத் தோழர்கள், இங்கே தாங்கள் அறிந்துகொள்கிற கருத்துக்களை, தங்கள் தங்கள் சிற்றூர் பேரூர்களுக்குச் சென்றதும் ஆங்காங்குள்ள மக்களுக்கு எடுத்துச சொல்ல வேண்டும்—ஒரு பெரும் ஆற்று நீரை, வாய்க்கால்கள் வாங்கி, பின், விளை நிலங்களுக்குத் தருவது போன்று!

நாம் அரசியல் விடுதலை மட்டும் போதுமானது என்ற கருத்துள்ளவர் அல்லர்—காங்கிரசாரைப்போல!

பொருளாதார விடுதலை மக்களுக்குக் கிடைத்துவிட்டாலே, எல்லாம் சரிஆகிவிடும் என்றும் நினைப்பவர்கள் அல்லர்—கம்யூனிஸ்டுகளைப் போன்று! நாம், சமுதாய — பொருளாதார—அரசியல் ஆகிய முப்பெரும் துறைகளிலும் ஒரு பெரிய மாற்றம் தேவை என விரும்புபவர்கள்.

நாம், மனிதனின் உள்ளம் சமுதாயமாகவும், உடல் பொருளாதாரமாகவும், அவன் செயல் அரசியலாகவும் இருப்பதாக உணர்கிறோம்.

ஒரு மனிதன் செயலாற்ற, உடல் வேலை செய்வதற்கே உள்ளம் தூண்ட வேண்டும்; உள்ளத்திலே இன்ன காரியத்தைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் எழுந்தால்தான், உடல், செய்யப்பட வேண்டிய காரியத்தைச் செய்ய முனையும்; எனவே, உள்ளம் பண்பட்டிருந்தால்தான், செய்யப்படும் காரியம் சிறந்ததாயிருக்க முடியும.

சமுதாயம் செப்பனிடப்பட்டதாயிருந்தால் அந்தச் சமுதாயத்தின் பொருளாதாரமும், அரசியலும் சீர்பட்டதாயிருக்க முடியும்.

ஏழை—பணக்காரன், தொழிலாளி—முதலாளி, அடிமை—ஆண்டான் என்ற பேதங்கள் ஒழிக்கப்பட, மனிதனின் உள்ளம் பண்படுத்தப்பட்டதாக வேணடும்.

நாம் இப்படிச் சொல்லும்போதே சிலர் சொல்கின்றனர்—‘இவர்கள் சமுதாயத்தைப் பற்றித்தான் கவலைப்படுகின்றனர்,’ என்று! நிச்சயமாக இல்லை; சமுதாயத்தைப் பற்றியும் கவலைப்படுகிறோம்; பொருளாதாரத்தைப்பற்றியும் கவலைப்படுகிறோம்; அரசியலைப்பற்றியும் கவலைப்படுகிறோம்.

அதே போலே, முதலில் சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்பட்டு அதைச் சீர்திருத்தி செப்பனிட்டுவிட்டு, பின்னர் அரசியலுக்குப் போவோம் என்கிற நிலையிலுமல்ல நாம் இருப்பது—சமுதாயப் பணி, பொருளாதார மாற்றம், அரசியல் விடுதலை இவற்றிற்காக ஏககாலத்தில் நாம பாடுபடுகிறோம்.

சீன நாட்டிலே, மக்கள் ஆட்சியை நிறுவிய மா-சே-துங், ‘நாங்கள் சீனாவின் கலாச்சாரப புரட்சிக்காகவும் தொடர்ந்து கடந்த 30 ஆண்டுகளாகப் பாடுபட்டு வந்திருக்கிறோம்,’ என்று குறிப்பிட்டுள்ளதைப் போலத்தான், நாமும், இந்த நாட்டிலே, தொடர்ந்து சமுதாயப் பணிபுரிந்து வருகிறோம்.

இந்நாட்டு மக்கள் தாங்களாகவே நிலைகளைத் தெரிந்து கொள்ள இயலாதவர்களாயிருக்கின்றனர்.

வேறு பல நாடுகளில், மக்கள் தொகையில் 80 சதவிகித்தினர் படித்தவர்களாயிருக்கின்றனர். அவர்களுக்கு நாட்டு நிலைகளைத் தெரிந்து அதற்கேற்ப நடந்துகொள்ள அவர்களின் கல்வி அறிவு பயன்படுகிறது; ஆனால், இந்த நாட்டிலே நிலை அதுவல்லவே? நூற்றுக்கு 83 பேர் தற்குறிகளாயிருக்கின்றனரே!

வேறு நாட்டவர், இருட்டறையில் நடப்பதற்கு, கையில் ‘டார்ச் லைட்’ வைத்திருக்கின்றனர்; நாம், இருட்டறையில், கையால் தடவித்தடவி நடக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்!

இந்த நாட்டு மக்களில் 83 சதவிகித்தினர், வள்ளுவர் குறள்படி, முகத்திரண்டு புண்ணுடையவர்கள்—கண்களை உடையவர்கள் அல்லர்; அந்த அவல நிலையிலிருப்போருக்காகத்தான் நாம் பாடுபட்டு வருகிறோம்!

விலங்கினங்களின் இலட்சியமெல்லாம், புசித்த தோத்

தில் உண்பது; இன உற்பத்தி உறவு கொள்வது; உறங்குவது—அவ்வளவுதான்; ஆனால், மனிதனின் இலட்சியங்கள் அவ்வளவுதானா? இல்லையே!

இன்றைய உலகில் மனிதர்கள் எல்லாம், தங்கள் உழைப்பைக் குறைத்து, வசதியைப் பெருக்கி, மனித வாழ்வின் இன்பத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என முயற்சிக்கிறார்கள்—முயற்சித்துக் கொண்டே இருக்கிறார்கள்!

ஒரு காலத்தில், மனிதன், தான் செல்ல வேண்டிய இடத்திற்கு நடந்தே சென்றான்; பின்பு விலங்கினங்களில் மாடு, குதிரை போன்றவைகளைக் கட்டுப்படுத்தி, பயிற்றுவித்து, அவற்றின் மீது ஏறிச் செல்வதின் மூலம் நடப்பதைக் குறைத்துக்கொண்டான்; பின்னர், இன்னும் சற்று வேகமாகச் செல்ல வேண்டுமே என எண்ணி, சிந்திக்கத் தொடங்கினான்.

உருண்டை வடிவமுள்ள பொருள்கள் எல்லாம் உருண்டு ஓடுவதைக் கண்ட அவன், இரு உருளைகளை ஒரு அச்சில் கோர்த்து, மாடு, குதிரை இவைகளைக் கொண்டு இழுக்கச் செய்தான்; உருளைகளின் கனம் குறையக் குறைய மாடும், குதிரையும் வேகமாக இழுக்க முடியும் என்பதைக் கண்டு உருளைகளை, இப்போதுள்ள வண்டிச் சக்கரங்கள் போன்று ஆக்கினான்; நாலு, அல்லது ஐந்து குதிரைகள் சேர்ந்து இழுத்தால் இன்னமும் வேகமாக வண்டி செல்ல முடியும் என அறிந்து, அப்படிச் செய்து, வேகமாக, தான் செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்வதில் தன் உழைப்பைக் குறைத்துக் கொண்டு, வசதியைப் பெருக்கிக் கொண்டான்; இன்று, மணிக்கு 700 மைல் வேகம் செல்லும் விமானம் கண்டிருக்கிறான் மனிதன்!

இப்படி எல்லாத் துறைகளிலும், மனிதன், தன் உழைப்பைக் குறைத்து, வசதியைப் பெருக்கிக் கொண்டு, இன்பமாக வாழ வேண்டும் என்று தொடர்ந்து முயற்சித்து வருவதைக் காண்கிறோம்.

நம்முடைய நாட்டில் இன்று நிலை என்ன?

பட்டினியால், மிருகங்கள் செத்ததாக நாம் கேள்விப்பட்டதுகூட இல்லை; ஆனால், இந்த நாட்டிலே மனிதர்களிடையே பட்டினிச் சாவு சாதாரணமாக தினசரிச் சம்பவமாகக் காட்சி தருவதைக் காணகிறோம்.

இந்த நாட்டு மக்களைக் காப்பதற்காக—இருப்பதாகச் சொல்லப்படும் ஆண்டவர்கள் ஆயிரம் ஆயிரமாக, அவதாரங்கள் எண்ணற்றவைகளாக, இன்னும் எத்தனையோ கடவுள்களாக இருந்தும், இங்கே பட்டினிச் சாவுகள் அதிகமாக இருக்கின்றனவே!

சமுதாயக் குறைபாடுகளால் சமுதாயத்திலே தன் வாழ்விற்குப் பாதுகாப்புத் தரப்படாததால், நடைபெறுகிற தற்கொலைகள் ஏராளம், இந்த நாட்டில் தானே!

உலகத்திலே வாழ்கிற 240 கோடி மக்களுக்குத் தேவையான உணவு, உடை, இடம் இல்லை என்றா நினைக்கிறீர்கள்? உலகத்திலே உள்ள 240 கோடி மக்களின் தேவைக்கு மிக மிக அதிகமாகவே உணவும் பொருளும், உடை வசதிகளும், இடப் பெருக்கமும் இருக்கத்தான் செய்கின்றன.

அதேபோல, இந்த நாட்டைமட்டும் எடுத்துக் கொண்டாலும், அவர்களின் தேவைக்கு அதிகமாகவே உணவும், உடையும், இருப்பிடமும் இருக்கின்றன; என்றாலும், நம் மக்களால் வாழ முடியவில்லையே! பட்டினிச் சாவுகளும் தற்கொலைகளும் மலிந்து கிடக்கின்றனவே—ஏன்?

‘எல்லாம் இருந்தும் ஏன் நம்மால் வாழ முடியவில்லை’ என்று தெரிந்துகொள்ளாத மக்களின் மனநிலைதானே அதற்குக் காரணம்? நாட்டு நிலைகளைப் பகுத்தறியும் பண்பு, இன்னமும் இந்த நாட்டவரிடையே மலரவில்லையே?

நம்மவரின் நேரம், நினைப்பு, உழைப்பு, அறிவு, ஆற்றல் திறன் எல்லாம் தேவையற்ற, பலனில்லாத ஒன்றிற்குச் செல்கின்றனவே! அந்த நிலை மாற வேண்டாமா?”

உலகத்திலேயே மிகச் சிறந்த கருத்து எது என்று வள்ளுவரைக் கேட்டால், அவர் சொல்கிறார்—“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்”—என்று! அந்தக் கருத்து நாட்டிலே நடைமுறைக்கு வரவேண்டாமா?’

தோழர் நெடுஞ்செழியன் தொடர்ந்து பேசுகையில், நாட்டிலே மக்கள் பிரிந்து கிடக்கும் சாதிப் பாகுபாடுகளைச் சுட்டிக் காட்டி, அவைகளை மறந்து ‘எல்லோரும் ஓர் இனம்’ எனும் நிலைக்கு, மக்கள் உள்ளத்தால் உணர்ந்து, வரவேண்டும் என்பதைத் தெளிவாக்கினார்.

பின்னர், மனிதன் இன்று உலகில் வாழ்வதும் தாழ்வதும் அவன் அறிவுத் திறத்தாலன்றி கடவுள்களால் இல்லை என்பதையும் விளக்கினார். ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்ற வள்ளுவன் வாக்குப்படி மக்கள் நல்ல அறிவைப் பெற்றிருந்தால், தாங்கள் விரும்புகிறபடி ‘எல்லாம் எல்லார்க்கும்’ எனும் பொருளாதார மாற்றத்தையும், ‘நம் நாடு நமதே’ என்னும் அரசியல் வாழ்வையும் பெற முடியும் என்பதையும் தெளிவுபடச் சொல்லிவிட்டு, தொடர்ந்து குறிப்பிட்டதாவது :—

‘இன்று நாட்டிலே நல்ல தமிழ் யாராவது பேசினால், ‘நீ என்ன கழகமோ?’ என்று கேட்கிறார்கள்; நல்ல நடையில் எழுதினால் ‘நீ என்ன கழகமோ?’ என்று கேட்கிறார்கள். இப்படி நல்ல காரியங்கள் எதைச் செய்தாலும், ‘அவர்கள் கழகத்தவர்தான்’ எனும் எண்ணம் வளர்ந்து வருகிறது. அப்படிப்பட்ட முறையில்தான் ஒரு சில சினிமாப் படங்கள் நம்மவரால் எழுதப்பட்டன; உடனே ஒரு சிலர் சீறுகிறார்கள்; படத்தைத் தடை செய்—கடவுளை நிந்தல்

(4-ம் பக்கம் பார்க்க)

போர்ச்சுகீசிய கப்பலில் நிறவெறி

கப்பலல் செல்ல நீக்ரோ மாலுமிகள் மறுப்பு

கொழும்பு, ஜூன் 28—போர்ச்சுகீசிய கப்பல் ஒன்றில் நிறவெறி காரணமாக, 31 தென் ஆப்பிரிக்க மாலுமிகள் கொழும்பிலிருந்து விமான மூலம் செல்லும்படி நேர்ந்தது.

ஹாங்காங் துறைமுகத்தில் விற்பனை செய்யப்பட்ட ‘என். எஸ். நார்தினால்’ என்ற கப்பலை ஓட்டிச் சென்றவர்களான இந்த 31 பேரும் கறுப்பர்கள்; தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள்.

கப்பல் விற்பனை செய்யப்பட்ட பின்னர் இந்த மாலுமிகள் 31 பேரும் ஹாங்காங்கிலிருந்து போர்ச்சுகீசிய கப்பலான ‘இந்திடா’ என்னும் கப்பலில் கொழும்பு வந்துசேர்ந்தனர்.

ஆனால், கொழும்புவில் இறங்கியதும், அந்த மாலுமிகள், தாங்கள் கறுப்பர்கள் என்ற காரணத்தால் போர்ச்சுகீசிய கப்பலில் தாங்கள் தகாத முறையில் நடத்தப்பட்டதாகவும், தொடர்ந்து அக்கப்பலில் பிரயாணம் செய்ய தங்களால் முடியாது என்றும் கூறிவிட்டனர். ஆகவே, ‘நார்தினால்’ கப்பல் கம்பெனியார் இவர்களைத் தென் ஆப்பிரிக்காவுக்கு விமான மூலம் அனுப்பி வைத்துக் கொண்டனர். இதனால் அந்த கப்பல் கம்பெனிக்கு ரு 62,000 செலவாகும் என்று தெரிகிறது.

100 ஆரம்பப் பள்ளிகள்

வ.ஆ மாவட்டத்தில் திறக்கப்படும்

திருவண்ணாமலை, ஜூன் 29—வட ஆற்காடு மாவட்ட கிராம அபிவிருத்திக் குழு வெள்ளியன்று வடகளம்பூரில் நடைபெற்றது.

அப்போது மாவட்ட அதிகாரியின் உதவியாளர் சுந்தரம், வடார்க்காடு மாவட்டத்தில் 100 ஆரம்பப் பள்ளிகள் திறக்கப்படும் என்று கூறினார்.

பெற்றோர்கள் பள்ளிகளுக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்ப வேண்டுமென்றும், பள்ளிகளுக்கான கட்டிடங்களை இலவசமாக அளிக்க முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சென்னைத் தமிழாசிரியர் கழகம்

சென்னை, ஜூன் 30—மாநாட்டுக்காக கூடியதினை போட்டு, 27—6—54 அன்று சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் நிகழ்ந்த சென்னைத் தமிழாசிரியர் கழகக் கூட்டத்தில், மேல்வருமாறு தீர்மானங்கள் நிறைவேறின :-

(1) ஒரே வகையான ஊதிய உயர்வு; (2) பாட திட்டங்களைக் கவனித்தல்; (3) அரசாங்கத் தேர்வுக் குழு, புத்தகத் தேர்வுக் குழு ஆகியவற்றில் தமிழாசிரியர்கட்கு இடம்; (4) வித்துவான் பட்டம் பெற்றவர்களும், செனட் சபை உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெறுதல்; (5) ஐந்தமாதப் பயிற்சிக்கல்லூரியை நீட்டித்தல்; (6) சென்னையிலுள்ள எல்லாத் தமிழாசிரியர்களும் தனிப்பட்ட முறையிலோ, சேர்ந்தோ பொருள் தொகுத்து அனுப்புதல்.

முகவரி மாற்றம்

எஸ். எஸ். ராஜேந்திரன்,
டி. வி. நாராயணசாமி,
11, வெங்கடரத்னம் ரோடு,
தேனாம்பேட்டை, சென்னை-18.

* * *

தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியர் சம்மேளனத்தின் அலுவலகம், நெ. 9, சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

ஆக்லந்து :

நியூஸிலாந்தின் மிகப் பெரிய எரிமலையான 'மவுண்ட் ருவாபெஹு' நெருப்பைக் கக்குகிறது! இம்மலையின் உயரம் 7,515 அடிகள் என்றும், இரண்டு வாரங்களாகவே இந்த மலை புகைந்துகொண்டிருந்தது என்றும் தெரிகிறது.

★

பெர்ன் :

ஐ. நா. சபைத் தலைவி திருமதி விஜயலட்சுமி பண்டிட் ஸ்விட்சர்லாந்து குடியரசுத் தலைவர் ருடால்ப் ருபேடலை பேட்டி கண்டார். அவருக்கு ஸ்விஸ் சர்க்கார் விருந்தளித்தனர் என்று தெரிகிறது.

* * *

இந்தோ-சீனப் போர் நிறுத்தம் பற்றி ஒன்பது நாடுகளிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் இரகசிய மகாநாட்டின் 19-வது கூட்டம் சோவியத் பிரதிநிதி மோலொடோவ் தலைமையில் நடைபெற்றது.

★

ஹாங்காங் :

சீனப் பிரதமர் சூ-என்-லாய் இந்தியா, பர்மா ஆகிய நாடுகளின் தலைநகரங்களுக்குச் சென்று பின்னர் காண்டன் போய்ச் சேர்ந்தார். வழியில் ஹாங்காங் விமான நிலையத்தில் 40 நிமிட நேரம் அவர் தங்கினார் என்று தெரிகிறது.

★

கெய்ரோ :

பரூக் மன்னரின் முடி துறவுக்குப் பின்னர் எகிப்தில் அமைக்கப்பட்ட புரட்சி விசாரணைக்குழு சீக்கிரமே கலைக்கப்படலாம் என்று தெரிகிறது. இக்குழுவிற்கு மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

* * *

நேரு - சூ - என் - லாய் சமாதான முயற்சியை எகிப்து ஆதரிக்கிறது என்று எகிப்திய அதிகாரி ஒருவர் கூறினார்.

★

லண்டன் :

சோவியத் விஞ்ஞான கழகத்தினரால் அழைக்கப்பட்டு, இந்திய விஞ்ஞானிகள் குழு ஒன்று மாஸ்கோ வந்து சேர்ந்தார்கள் என்று 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது. மகலனோபிஸ் என்பவர் இக்குழுவின் தலைவராக இருக்கிறார்.

* * *

சீனு - பிரிட்டன் வர்த்தகப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாயின என்று தெரிகிறது. சீனாவின் சார்பில் ஏழு பேர் கலந்துகொள்கின்றனர். பேச்சுக்கள் மிகவும் இரகசியமாய் நடைபெறுகின்றன.

★

பெய்ரூத் :

மத்திய கிழக்கு பற்றி லெபனான் சர்க்காருடன் பேச்சு வார்த்தைகள் நடத்த எகிப்திய வெளிநாட்டிலாகா அமைச்சர் மேஜர் சலீம் லெபனான் தலைநகரான பெய்ருத் நகருக்குச் சென்றார்.

★

கான்சாஸ் நகரம் :

அமெரிக்காவின் முன்னாள் குடியரசுத் தலைவர் ட்ருமன் ஆபரேஷன் நடைபெற்ற பின்னர் குணமடைந்து விட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

★

பாரிஸ் :

வாஷிங்டனில் நடைபெற்ற ஆங்கிலோ-அமெரிக்கப் பேச்சு வார்த்தைகள் பற்றி பிரெஞ்சு பிரதமரிடம் அமெரிக்கத் தூதுவர் டக்லஸ் டில்லன் எடுத்துக் கூறினார் என்று தெரிகிறது.

கார்ல் ஷர்ஹூ :

ஜெர்மனியில், நாஜி சர்க்கார் ஆட்சியில் கோயபல்சின் இராஜாங்க காரியதரிசியாக இருந்த டாக்டர் வர்னர் நாமன் மீது பெடரல் கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

★

அம்மான் :

அரபு நாடுகளின் எல்லைப்பிரதேசத்திலும், ஜோர்டன் எல்லையிலும், இஸ்ரேலின் தாக்குதலைச் சமாளிக்க அரபு நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஜோர்டன் சர்க்கார் வேண்டுகோள் விட்டிருக்கிறது.

★

அங்காரா :

மேற்கத்திய நாடுகளிடம் லிபியா உதவி கேட்டிருப்பதை ஆதரித்து அதற்கான செய்வதாக துருக்கி, லிபியாவுக்குத் தெரிவித்திருக்கிறதாம். லிபியா பிரதமர் முன்தாஸா பென் துருக்கி சென்று, பின்னர் இப்போது வாஷிங்டனுக்குச் செல்ல இருக்கிறார்.

★

ஒட்டாவா :

காமன்வெல்த் மாநாடு ஒன்றைக் கூட்டுவது பற்றி, தான், கனடா அமைச்சர்களுடன் பேசவில்லை என்றும், அப்படி ஒரு யோசனை கூறப்பட்டால் பிரிட்டன் பெரும்பான்மையினரின் கருத்தை ஒட்டியே நடக்கும் என்று வின்ஸ்டன் சர்ச்சில் கூறினார்.

★

மாஸ்கோ :

சோவியத் சர்க்காரும், பிரான்சும் விமானப் போக்குவரத்து ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டன. இதன் மூலம் பாரிசுக்கும் — மாஸ்கோவுக்கும் இடையே பிரயாணிகள் போக்குவரத்து இந்த ஆண்டு ஆகஸ்டு திங்களின் ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

★

நியூயார்க் :

நேரு—சூ-என்-லாய் பேச்சுக்களைப் பல அமெரிக்கர்கள் விரும்பவில்லை என்றும், இப்பேச்சுவார்த்தைகள் ஆசியாவிலிருந்து மேற்கத்தியர்களை வெளியேற்றவே நடைபெற்றிருக்குமென பலர் சந்தேகப்படுகிறார்களாம்.

★

பான் :

மேற்கு ஜெர்மனியில் சுற்றுப் பயணம் செய்யும் இந்தியப் பத்திரிகையாளர்கள், மேற்கு ஜெர்மன் அதிபர் அடினுரைச் சந்தித்தனர். சுதந்திரத்துடன் கூடிய அமைதியையே ஜெர்மனி விரும்புகிறது என்று அடினுர் பத்திரிகையாளர்களிடையே கூறினார்.

★

பெர்லின் :

அகில உலக பிலிம் விழாவில் பிரிட்டிஷ் படமான 'ஹாப்ஸன்'ஸ் சாய்ஸ்' என்னும் படத்திற்கு முதல் பரிசு அளிக்கப்பட்டது. 28 நாடுகள் இப்போட்டியில் கலந்துகொண்டன. டாகுமெண்டரி படங்களில் வால்ட் டிஸ்னியின் 'உயிருள்ள பாலைவனம்' என்னும் படத்திற்கு முதல் பரிசு அளிக்கப்பட்டிருக்கிறது.

★

வாஷிங்டன் :

உலகில் கம்யூனிசம் பரவுவதை தடுக்க செய்யவேண்டியன பற்றி அமெரிக்க நாடுகளின் வெளிவிவகார இலாகா அமைச்சர்கள் கூடிப் பேச வேண்டுமென்று அமெரிக்க நாடுகளின் கழகம் தீர்மானித்திருக்கிறது.

வாழ்வும் தாழ்வும்......

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செய்கிறான்—மதத்தைச் சாடுகிறான்—மக்களைத் தூண்டுகிறான்—என்றெல்லாம் பேசுகின்றனர்!

அவர்களுக்குச் சொல்கிறேன்—பேசும் படம் வெளிவந்த கடந்த 25 ஆண்டுகளாக புராண இதிகாசப் புரட்டுக்களைப் படத்தில் சொல்ல உங்களுக்கு வாய்ப்பிருந்தது; படமாக வெளிவராத புராணக் கதையே ஏறத்தாழ இல்லையென்று சொல்லலாம்; புராணப் படங்களாக சுமார் 5 000 படங்களாவது வெளிவந்திருக்கக் கூடும். அப்படி இருந்தும், நாங்கள் ஒரு படம் எழுதியதும், மக்கள் மனம் மாறிவிடுவதாக ஓலமிடுகிறீர்களே—என்ன பொருள் இதற்கு? நீங்கள் 5,000 படங்களிலும் தந்த புராணக் கருத்துக்களை, மத போதனைகளை, கடவுள் நம்பிக்கைகளை, எங்களின் ஒரு படக் கருத்து தவிடுபொடியாக்குகிறதென்றால், எந்தக் கருத்துச் சிறந்தது—நியாயமானது என்று எண்ணிப் பாருங்கள்! எங்கள் கருத்துக்கள் எத்துணை வலிமையுடையதாயிருந்தால் உங்கள் கருத்துக்களை ஓட ஓட விரட்டியிருக்க முடியும்? சிந்திக்க வேண்டாமா?

எனவேதான் தோழர்களே! நாம், நமது கருத்துக்களில்—கொள்கைகளில்—லட்சியத்தில் அசையாத நம்பிக்கை உடையவர்களாயிருக்கிறோம். அந்த நம்பிக்கை நமக்கு நல்லதொரு வெற்றியை நிச்சயமாகத் தந்தே தீரும்."

நான் ஒரு சீனனாயிருந்தால்..

பெவான் பேச்சு!

"நான் சீனப் புரட்சியை அழிக்க தொழிக்க முயலப்போவதில்லை; ஏனெனில், நான் ஒரு சீனனாயிருந்து, சீனர்கள் இன்று எந்த நிலையில் இருக்கிறார்களோ அந்த நிலைக்கு நானும் ஆளாக்கப்பட்டிருந்தால், நானும் ஒரு சீன கம்யூனிஸ்டாகவே இருப்பேன்" என்று பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் இடதுசாரித் தலைவரான பெவான, மான்ஸ்பீல்ட் என்னும் இடத்தில் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும், 'இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பிறகு, நடைபெறுகிற மாறுதல்களில் சீனாவில் நடைபெறும் மாறுதல் மிக முக்கியமானதும், அதிக நம்பிக்கையுடையதுமாகும்' என்றும், 'இன்று ஒரு நாட்டு மக்கள் தங்களுக்குத் தேவையான, தங்களுக்கு விருப்பமான அரசாங்கத்தை உருவாக்கிக் கொள்ள அதிகாரமும் உரிமையையும் பெற்று விட்டிருக்கிறார்கள்,' என்றும் குறிப்பிட்டார்.

தந்தையைக் கைது செய்த தனயன்!

அகமதாபாத், ஜூன் 30—

மெஹ்சனு மாவட்டத்திலுள்ள சேப்ஜி என்னுமிடத்தில், வார்வாஜி லாலுஜி என்ற தோழர் தனது தந்தை மதுவருந்திய நிலையில் இருந்தபோது அவரைக் கைது செய்தார்.

மதுவிலக்கு உதவி கமிட்டி உறுப்பினரான தோழர் வார்வாஜி, தனது தந்தை ஒரு பெரிய 'லைகாரர்' என்றும் குற்றம் சாட்டினார்.

நில உடைமைக்கு அதிகபட்ச வரம்பு கட்டுவதால் நிலப் பிரச்சினைக்கு பரிகாரம் காண முடியாதென்று விநோபாபாவே கூறியிருக்கிறார்.

இரங்கூன் :

மேல்பர்மா பகுதியில் 'காதா' மாவட்டத்தில் பர்மிய சர்க்கார் அருப்புகள் இரண்டு கம்யூனிஸ்டுகளான, கலகக்காரர்களின் தலைவர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என்று தெரிகிறது.

★

டோக்கியோ :

ஜப்பானுக்கு இந்தோனேஷியா தரவேண்டிய 1,10,70,000 ... வியாபாரக் கடனைத் திருப்பித் தராவிட்டால் இந்தோனேஷியா மீது கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்று ஜப்பான் கூறியிருக்கிறது. கடனின் கெடு நாளையுடன் தீர்ந்துபோகிறது.

டிராம் போக்கு—வரத்து

நகரசபை ஏற்று நடத்தத் தீர்மானம்

சர்க்கார் பொருளுதவி செய்யுமா?

சென்னை, ஜூன் 30—

சென்னை டிராம 'சர்வீசை' சென்னை நகரசபையே ஏற்று நடத்துவது என்று நகரசபைக் கூட்டத்தில் நேற்று தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானத்தில், நகரசபை, டிராம் சர்வீசை நடத்துவதற்கு சென்னை அரசாங்கம் 25 லட்சம் ரூபாய் வட்டியில்லாது கடன் தர வேண்டும் என்றும் சர்க்கார் அப்படி கடன்தர இயலாவிடில் பொதுமக்களிடம் தேவையான தொகைக்கு நகர சபை கடன் எழுப்ப அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டு அதுவும் நிறைவேறியது.

மேயர், கமிஷனர், ராதாகிருஷ்ணபிள்ளை, செங்கல்வராயன், அட்வகேட் ஜெனரல், தாராசெரியன் ஆகியோரைக்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது, இந்தக் குழு கம்பெனி அதிகாரிகளைச் சந்தித்து, பேச்சுவார்த்தைகள் நடத்துவது, டிராம் கம்பெனி எவ்வளவு நஷ்டத்துடன் நடந்தது—எவ்வளவு முதல் போட்டது—போன்ற திட்டங்களை வகுக்க வேண்டும் என தீர்மானத்தின் திருத்தத்தில் கண்டுள்ளது.

எடைக்கு எடை வெள்ளி நாணயம்!

திருமாலுக்கு ஆறாயிரம் ரூபாய் 'லஞ்சம்'

திருப்பதி, ஜூன் 30—

திருப்பதி, திருமலை சீனிவாசப் பெருமான் சன்னதியில் மைசூரைச் சேர்ந்த தேவராஜ் என்ற வியாபாரி, தனது நிறையளவு நிறுத்தி, வெள்ளி ரூபாய்களைக் காணிக்கையாகத் தந்தார்.

அவர், அம்மாதிரி ஆண்டவன் சன்னதியிலேயே தன்னைத் தராசில் நிறுத்தி, எடைக்கு எடை வெள்ளி ரூபாய் காணிக்கை செலுத்துவதாக வேண்டியிருந்தாராம்.

அவர் தராசில் நிறுத்தப்பட்டு, 3,931 வெள்ளி ரூபாய்கள் காணிக்கையாகத் தரப்பட்டனவாம்.

இது தவிர 'பிரம்மோத்சவத்'துக்காக ரூ. 1800ம், இருக்கல்யாண உத்சவத்துக்காக 500 ரூபாயும் அந்த வியாபாரி திருப்பதியப்பனுக்குத் தந்தாராம்!

செய்திக்கதிர்

கைது

கோவாவில் பல தேசிய வாதிகள் கைது செய்யப்படுகின்றனராம். மாபுஸாவைச் சேர்ந்த இரண்டு பிரபல வியாபாரிகள் கைது செய்யப்பட்டனர் என்றும், வீடுகளில் எல்லாம் சோதனை நடைபெறுவதாகவும் தெரிகிறது.

★

பாண்போர்ட்

பாண்போர்ட் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும்பொருட்டு இன்னும் நான்கு மாதங்களில் பாண்போர்ட் வழங்கும் அதிகாரத்தை மத்திய சர்க்காரே எடுத்துக் கொள்ளும் என்று தெரிகிறது.

★

அலவன்சு

குரோம்பேட்டை சர்க்கார் தோல் பதனிடும் பாக்டரியில் அலவன்ஸ் பெறாத சில தொழிலாளர்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் வீட்டு வாடகை அலவன்சும், தொழிலாளர்களுக்கு சர்க்கார் பஸ்களில் இலவச யாத்திரை வசதியும் அளிக்கப்படும் என்றும் தெரிகிறது.

★

மறுப்பு

பாக். சர்க்கார், இந்திய சினிமாப்பட இறக்குமதி முழுமையும் தடைசெய்யப் போவதாக வெளியான செய்தி தவறானது என்று பாகிஸ்தான் வர்த்தக இலாகா அமைச்சர் மறுத்தார்.

★

திருட்டு

திருப்பதி கோவிந்தராஜ சுவாமி கோவிலில் இருந்த சிறு உண்டிகள் திருடப் போயின என்று தெரிகிறது. பக்கத்தில் உள்ள காட்டில் போலீசார் ஒருவரை சோதனையிட்டு 350 ரூபாய் கைப்பற்றினார்களாம்.

★

வழக்கு

மைசூரின் மகன் பீரார் இளவரசர் மீது ரூ 61,70,000 பாக்கி வரவேண்டுமென்று செகந்திராபாத் துணிக் கடைக்காரர் ஒருவர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

★

வரவேற்பு

நேரு - சூ - என் - லாய் விடுத்த கூட்டறிக்கையை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்றிருக்கிறது.

★

நகரசபை வருமானம்

நாடகம், சங்கீதம் போன்ற பல கேளிக்கைகளை ஏற்பாடு செய்தும், கண்காட்சிகள் நடத்தியும், நகரசபையின் வருமானத்தை அதிகரிக்கலாம் என்று அமைச்சர் பக்தவத்சலம் சென்னை நகரசபைப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

★

விவசாயக் கல்வி

செகண்டரி படிப்புடன் விவசாயப் பயிற்சியும் அளிக்கவேண்டுமென்றும், மோட்டார் இஞ்சினியரிங் சம்பந்தமான தொழிற் கல்வி படிப்பும் சேர்க்கப்பட வேண்டுமென்றும் கூடூரில் நடைபெற்ற தலைமை ஆசிரியர்கள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, ஜெனரல் முத்தையா செட்டித் தெரு, சென்னை—1) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.